Chapter XX*III Code of Criminal Procedure)*

| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
|---|---|---|---|
| Calendar | | SC. No.369/2022 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W. 14 |
| | | Defence | |
| Name | | Dr.திருமதி.நந்தினி | |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 1st day of July 2025.

( எதிரிகள் ஆஜர். எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது,)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.04.2022ம் தேதி நான் பணியில் இருந்தபோது மாலை 5.40 மணிக்கு முகேஷ் 27 வயதுடைய, த/பெ.கருப்பசாமி, ரஸ்தா மெயின்ரோடு, சங்கரன்கோவில் ரோடு, திருநெல்வேலியை சேர்ந்தவர் சிகிச்சைக்காக அழைத்துவரப்பட்டார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 4 நபர்கள்

இசக்கியம்மன்கோவில் அருகே மதவக்குறிச்சியில் வைத்து 20.04.2022ம் தேதி மாலை 5.00 மணியளவில் தன்னை தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு

1. பின்னந்தலையில் சிதைந்த காயம் 4 x 2 x 2 செ.மீ அளவில் இருந்தது.

அவரை சிகிச்சைக்காக உள்நோயாளியாக சேர்க்க பரிந்துரைத்தேன். ஆனால் அவர் மருத்துவமனையில் மருத்துவருக்கு தெரியாமாலேயே வெளியேறிவிட்டதால் காயச்சான்றிதழ் கொடுக்க இயலாது என தெரிவிக்கிறேன். அவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.12 ஆகும்.

பின்னர் 20.04.2022ம் தேதி மாலை 5.00 மணியளவில் நான் பணியில் இருந்தபோது மாயாண்டி, 20 வயது, த/பெ.முருகன், ரேஷன்கடை தெரு, ரஸ்தா, சங்கரன்கோவில் ரோடு, திருநெல்வேலியை சேர்ந்தவர் சிகிச்சைக்காக அழைத்துவரப்பட்டார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 4 நபர்கள் இசக்கியம்மன்கோவில் அருகே மதவக்குறிச்சியில் வைத்து 20.04.2022ம் தேதி மாலை 5.00 மணியளவில் தன்னை தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு

1. சீராய்ப்பு காயம் 1 x 1 x 1 செ.மீ அளவில் கழுத்தில் காணப்பட்டது.

அவரை சிகிச்சைக்காக உள்நோயாளியாக சேர்க்க பரிந்துரைத்தேன். ஆனால் அவர் சிகிச்சையில் இருக்கும்போது மருத்துவருக்கு தெரிவிக்காமாலேயே மருத்துவமனையில் இருந்து வெளியேறிவிட்டதால் காயச்சான்றிதழ் கொடுக்க இயலாது என தெரிவிக்கிறேன். அவருக்கு

வழங்கப்பட்ட விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.13 ஆகும்.

பின்னர் 20.04.2022ம் தேதி மாலை 5.00 மணியளவில் நான் பணியில் இருந்தபோது ராஜபாண்டி, 20 வயது, த/பெ.கருப்பசாமி, ரஸ்தா மெயின்ரோடு, சங்கரன்கோவில் ரோடு, திருநெல்வேலியை சேர்ந்தவர் அவரது தாயாரால் சிகிச்சைக்கு அழைத்துவரப்பட்டார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 4 நபர்கள் இசக்கியம்மன்கோவில் அருகே மதவக்குறிச்சியில் வைத்து 20.04.2022ம் தேதி மாலை 5.00 மணியளவில் தன்னை தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு

1. சிதைந்த காயம் 3 x 1 x 1 செ.மீ அளவில் தலையின் முன்பகுதியில் காணப்பட்டது.

2. வலது கையில் ரத்தக்கட்டு காணப்பட்டது.

அவரை மேல் சிகிச்சைக்காக உள்நோயாளியாக சேர்க்க பரிந்துரைத்தேன். ஆனால் அவர் சிகிச்சையில் இருக்கும்போது மருத்துவருக்கு தெரிவிக்காமாலேயே மருத்துவமனையில் இருந்து வெளியேறிவிட்டதால் காயச்சான்றிதழ் கொடுக்க இயலாது என தெரிவிக்கிறேன். அவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.14 ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். நான் மேல்சொன்ன காயங்கள் கம்பி போன்ற பொருட்களால் அடித்தால் ஏற்படக்கூடியதாகும் என்றால் சரிதான்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சிகிச்கைக்கு வந்த 3 நபர்களும் இருசக்கர வாகனத்தில் வந்து தவறி விழுந்தால் கூட மேல்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால்

ஏற்பட வாய்ப்புண்டு.

மறுவிசாரணை இல்லை.

Chapter XX*III Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC. No.369/2022 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W. 15 |
| | | Defence | |
| Name | | Dr.திரு.செல்வமுருகன் | |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 1st day of July 2025.

( எதிரிகள் ஆஜர். )

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.04.2022 ம் தேதி நான் பணியில் இருந்தபோது மானூர் காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற எண். 120/2022 வழக்கில் இறந்துபோன சுப்பிரமணியன் என்ற 27 வயதுடைய ஆணின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் காவலர் எண். 4108, திரு.சூசை தேவசகாயம்

என்பவர் மூலம் காலை 10.15 மணிக்கு பெற்றுக்கொண்டேன். பின்னர் அந்த பிரேதத்தை பொறுப்பு காவலரால் எங்கள் துறை பிரேத பரிசோதனை அறையில் வைத்து அன்றைய தினம் காலை 10.20 மணிக்கு அடையாளம் காட்டப்பட்டு பிரேத பரிசோதனையை தொடங்கினேன். அந்த பிரேதத்தில் மரண விறைப்பு தன்னை உடல் முழுவதும் பரவி காணப்பட்டது. அதன் கை மற்றும் கால், விரல் நகங்கள் வெளிரி காணப்பட்டன. பிரேதத்தில் காணப்பட்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு

1. 7 x1 x1 செ.மீ அளவுள்ள கிடைமட்டமான வாய்விரிந்த வெட்டுக்காயம் முன் தலையின் வலதுபுறம் காணப்பட்டது. அதன் கீழ் உள்ள தலைதோல் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

2. 1 x 0.5 செ.மீ அளவுள்ள ஒரு சாய்வான வெட்டுக்காயம் காயம் எண்.1 ற்கு 3 செ.மீ கீழே காணப்பட்டது.

3. 6 x 1 x 1 செ.மீ அளவுள்ள ஒரு கிடைமட்டமான வாய்விரிந்த வெட்டுக்காயம் வலது பரைட்டல் பகுதியில் காணப்பட்டது. அதன் கீழ் உள்ள தலைத்தோல் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

4. 3 x 1 x 1 செ.மீ அளவுள்ள கிடைமட்டமான வாய்விரிந்த வெட்டுக்காயம் காயம் எண்.3 ற்கு 2 செ.மீ மேல காணப்பட்டது. அதன் கீழ் உள்ள தலைத்தோல் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

5. 6 x 2 x 1 செ.மீ அளவுள்ள ஒரு சிதைந்த காயம் வலது முன் மற்றும் பக்கவாட்டு தலைப்பகுதியில் காணப்பட்டது.

6. 6 x 1 x 1 செ.மீ அளவுள்ள ஒரு கிடைமட்டமான வாய்விரிந்த வெட்டுக்காயம் இடது பரைட்டல் பகுதியில் காணப்பட்டது. அதன் கீழ்

உள்ள தலைத்தோல் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

7. 8 x1 x1 செ.மீ அளவுள்ள ஒரு கிடைமட்டமான வாய்விரிந்த வெட்டுக்காயம் இடது காதிற்கு 2 செ.மீ மேலே காணப்பட்டது. அதன் கீழ் உள்ள தலைத்தோல் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

8. 10 x 2 x 3 செ.மீ அளவுள்ள ஒரு கிடைமட்டமான வாய்விரிந்த வெட்டுக்காயம் இடது காதின் நடுவில் காணப்பட்டது. அதன் கீழ் உள்ள இடது காது மற்றும் தலை எலும்பு வெட்டுப்பட்டு காணப்பட்டது.

9. 0.5 x0.5x0.5 செ.மீ அளவுள்ள ஒரு வெட்டுக்காயம் இடது கன்னத்தில் மூக்கிற்கு அருகில் காணப்பட்டது.

10. 13 x 1 x 3 செ.மீ அளவில் ஒரு வாய்விரிந்த வெட்டுக்காயம் வலது கன்னத்தின் கீழ்பகுதியில் வாயில் இருந்து காதுபகுதி வரை நீண்டுயிருந்தது. அதன் கீழ் உள்ள சதைகள் மற்றும் கீழ்தாடை எலும்பின் வலது பகுதி வெட்டுப்பட்டு காணப்பட்டது.

11. 18 x3 x5 செ.மீ அளவுள்ள ஒரு கிடைமட்டமான வாய்விரிந்த வெட்டுக்காயம் உதட்டின் வலது பகுதியில் கீழ்புறத்தில் தாடையில் இருந்து கழுத்தின் வலதுபுறம் வரை நீண்டுயிருந்தது. அது காயம் 10 ல் இருந்து 2 செ.மீ கீழே காணப்பட்டது. அதன் கீழ் உள்ள சதைகள், கீழ்தாடை எலும்பின் வலதுபுறம் மற்றும் 2 வது சர்வேகல் கழுத்து எலும்பு வெட்டுப்பட்டு இருந்தது.

12. 5 x3 x1 செ.மீ அளவுள்ள ஒரு வெட்டுக்காயம் கழுத்தின் வலதுபுறம் மேல்பகுதியில் காணப்பட்டது.

13. 13 x 3 x 7 செ.மீ அளவில் ஒரு கிடைமட்டமான வாய்விரிந்த வெட்டுக்காயம் கழுத்தின் வலதுபுறம் நடுவில் காணப்பட்டது. அதன் கீழ்வுள்ள சதைகள், ரத்தக்குழாய்கள், நரம்புகள், மூச்சுக்குழாய் மற்றும் 3 வது சர்வேக்கல் கழுத்து எலும்பு வெட்டுப்பட்டு காணப்பட்டது.

14. 13 x 3 x7 செ.மீ அளவுள்ள ஒரு கிடைமட்டமான வாய்விரிந்த வெட்டுக்காயம் கழுத்தின் வலதுபுறம் கீழ்பகுதியில் காணப்பட்டது. அதன் கீழ் உள்ள சதைகள், மூச்சுக்குழாய், ரத்தக்குழாயகள், நரம்புகள் மற்றும் 4 வது சர்வேக்கல் கழுத்து எலும்பு வெட்டுப்பட்டு காணப்பட்டது.அந்த காயம் காயம்எ ண். 13 ற்கு 1 செ.மீ கீழே காணப்பட்டது.

15. 13 x 3 x6 செ.மீ அளவுள்ள ஒரு கிடைமட்டமான வாய்விரிந்த வெட்டுக்காயம் கழுத்தின் வலதுபக்க அடிப்பகுதியில் காணப்பட்டது. அதன் கீழ் உள்ள சதைகள், ரத்தக்குழாய்கள் மற்றும் நரம்புகள் வெட்டுப்பட்டு காணப்பட்டன.

16. 7 x 1 x1 செ.மீ அளவுள்ள ஒரு சாய்வான வாய்விரிந்த வெட்டுக்காயம் பின்தலையின் நடுபகுதியில் காணப்பட்டது. அதன் கீழ் உள்ள தலைத்தோல் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

17. 18 x2 x7 செ.மீ அளவுள்ள ஒரு கிடைமட்ட வாய்விரிந்த வெட்டுக்காயம் கழுத்தின் பின்பகுதியில் மேல்புறமாக காணப்பட்டது. அதன் கீழ் உள்ள சதைகள் மற்றும் 3 வது சர்வேக்கல் கழுத்து எலும்பு வெட்டுப்பட்டு காணப்பட்டது.

18. 8 x1 x1 செ.மீ அளவுள்ள ஒரு சாய்வான வெட்டுக்காயம் காயம் எண். 17ற்கு 1 செ.மீ கீழே காணப்பட்டது. அதன் கீழ் உள்ள சதைகள் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

19. 0.5 x0.5 X0.5 செ.மீ அளவுள்ள வெட்டுக்காயம் காயம் எண். 18ற்கு 3 செ.மீ கீழே காணப்பட்டது.

20. 8 x1 x2 செ.மீ அளவுள்ள சாய்வான வாய்விரிந்த வெட்டுக்காயம் பின்கழுத்தின் கீழ்பகுதியில் 6 செ.மீ நீளமுடைய வாலுடன் காணப்பட்டது. அது முதுகின் வலதுபுறமாக நீண்டுயிருந்தது. அதன் கீழ் உள்ள சதைகள் வெட்டுப்பட்டு காணப்பட்டன.

21. 16 x 0.5 x0.5 செ.மீ அளவுள்ள ஒரு வளைந்த வெட்டுக்காயம் முதுகின் வலதுபுறம் மேல்பகுதியில் காணப்பட்டது.

22. 18 x2 செ.மீ அளவுள்ள சீராய்புடன் கூடிய ரத்தக்கட்டு முதுகின் மேல்பகுதியில் வலதுபுறம் காணப்பட்டது.

23. 5 x 0.5 x0.5 செ.மீ அளவுள்ள ஒரு சாய்வான வெட்டுக்காயம் முதுகின் மேல்புறம் இடதுபுறம் காணப்பட்டது.

24. 7 x1 x செ.மீ அளவுள்ள ஒரு வளைந்த வெட்டுக்காயம் வலது தோள்பட்டடையில் மேல்பகுதியில் உட்புறமாக காணப்பட்டது. அதன் கீழ் உள்ள சதைகள் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

25. 8 x3 x1 செ.மீ அளவுள்ள ஒரு வளைந்த வெட்டுக்காயம் வலது தோள்பட்டையில் மேல்பகுதியில் காணப்பட்டது.அதன் கீழ் உள்ள சதைகள் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

26. 5 x 1 x1 செ.மீ அளவுள்ள ஒரு வளைந்த வெட்டுக்காயம் காயம்

எண்.25ற்கு 1 செ.மீ கீழே காணப்பட்டது.அதன் கீழ் உள்ள சதைகள் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

27. 2 x1 செ.மீ அளவுள்ள சீராய்ப்பு காயம் வலது கன்னத்தில் காணப்பட்டது.

28. 8 செ.மீ நீளமுடைய கீறல் மார்பின் இடதுபுறம் காணப்பட்டது.

29. 3 x2 செ.மீ அளவுடைய சீராய்ப்புடன் கூடிய ரத்தக்கட்டு மார்பின் நடுவில் காணப்பட்டது.

30. 2 x2 செ.மீ அளவுள்ள சீராய்ப்புடன் கூடிய ரத்தக்கட்டு மார்பின் இடதுபுறம் காணப்பட்டது.

31. 1 x1 செ.மீ அளவுள்ள சீராய்ப்பு காயம் கழுத்தின் இடதுபுறம் வேர்பகுதியில் காணப்பட்டது.

32. 1 x1 செ.மீ அளவுள்ள சீராய்ப்பு காயம் இடது தோள்பட்டையில் காணப்பட்டது.

33. 14 x6 x 7 செ.மீ அளவுள்ள கிடைமட்டமான வாய்விரிந்த வெட்டுக்காயம் மார்பின் இடதுபுறம் மேல்பகுதியில் காணப்பட்டது. அதன் கீழ் உள்ள சதைகள் மற்றும் இடது காரை எலும்பு வெட்டுப்பட்டு காணப்பட்டது.

34. 16 x3 செ.மீ அளவுள்ள சீராய்ப்புடன் கூடிய ரத்தக்கட்டு இடது தோள்பட்டையின் பின்புறம் மற்றும் இடது மேல் கையில் பின்புறம் காணப்பட்டது.

35. 3 x 2 செ.மீ அளவுள்ள சீராய்ப்புடன் கூடிய ரத்தக்கட்டு இடது மேல்கையின் பின்புறம் கீழ்பகுதியில் காணப்பட்டது.

36. 1 x0.5 x0.5 செ.மீ அளவுள்ள ஒரு கிடைமட்டமான வெட்டுக்காயம் இடது முழங்கையின் பின்புறம் காணப்பட்டது.

37. 0.5 x 0.5 x0.5 செ.மீ அளவுள்ள ஒரு கிடைமட்டமான வெட்டுக்காயம் இடது முன்கையின் பின்புறம் காணப்பட்டது.

38. 16 x 13 செ.மீ அளவுள்ள ரத்தக்கட்டு இடது முன்கையின் பின்புறம் காணப்பட்டது.

39. 6 x 2 செ.மீ அளவுள்ள ரத்தக்கட்டு இடது விலாப்பகுதியில் காணப்பட்டது.

40. 20 x 4 செ.மீ x உட்புறம் வரை ஆழமுடைய ஒரு கிடைமட்டமான வாய்விரிந்த வெட்டுக்காயம் வயிற்றின் இடதுபுறம் மேல்பகுதியிலும், இடது விலாவிற்கு கீழ்பகுதியிலும் காணப்பட்டது.

41. 1 x1 செ.மீ அளவுள்ள சீராய்ப்பு காயம் இடது இடுப்பின் வெளிப்பகுதியில் காணப்பட்டது.

உள்ளுறுப்புகள் பரிசோதனையில் இருதயம், இருதய ரத்தக்குழாய்கள் நல்லநிலையில் காணப்பட்டன. நாவடி எலும்பு நல்ல நிலையில் காணப்பட்டது. இரைப்பையில் 100 கிராம் அளவு பகுதி செரிமானம் ஆன உணவுப்பொருட்கள் காணப்பட்டன. அதில் குறிப்பிடத்தக்க எந்த வாடையும் இல்லை. அதன் உட்புற சவ்வு வெளிரி காணப்பட்டது. நுரையீரல்கள், கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் மற்றும் மூளை நல்ல நிலையில் காணப்பட்டன. அவைகளின் குறுக்கு வெட்டுத்தோற்றம் வெளிரி காணப்பட்டது. சிறுகுடலில் 50 கிராம் அளவு பகுதி செரிமானம் ஆன உணவுப்பொருட்கள் காணப்பட்டன. அதில் குறிப்பிடத்தக்க எந்த வாடையும் இல்லை. அதன் உட்புற சவ்வு வெளிரி காணப்பட்டது.

சிறுநீர்பையில் 20 மில்லி அளவு சிறுநீர் காணப்பட்டது. ரத்தம் சேகரிக்கப்பட்டு அதன் வகை கண்டறிய பரிசோதனைக்க அனுப்பட்டது. பிரேத பரிசோதனை செய்யப்பட்ட நபர் அவர் கழுத்துப்பகுதியில் ஏற்பட்டு இருந்த வெட்டுக்காயங்களினால் இறந்திருக்காலாம் என்றும் காயம் எண். 13 மற்றும் 14 மரணம் விளைவிக்கக்கூடிய காயம் என்றும் மரணம் பிரேத பரிசோதனைக்கு முன்பு 12 முதல் 24 மணி நேரத்திற்குள் ஏற்பட்டுயிருக்காலம் என்று கருதி கூறி பிரேத பரிசோதனை அறிக்கை சான்று வழங்கினேன். எனக்கு வழங்கிய வேண்டுகோள் விண்ணப்ப நகல் அ.சா.ஆ.15. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா,ஆ.16 ஆகும். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அரிவாள்கள்மற்றும் கம்பிகளால் மேல் சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

மறுவிசாரணை இல்லை.